பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 16 திங்கட்கிழமை 30.06.2025 கதிர் 233

### இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி எப்படிப் போகப்போகின்றது என்பது யாழ். மாநகர சபைகளில் நிலவும் விடயங்களைப் ☞2

## நேற்றுவரை 33 எலும்புக்கூடுகள் மீட்பு

# 4ஆவது பெரும்புதைகுழித் தொகுதி செம்மணியில் இன்று தோண்டப்படும்

## அதற்குள்ளேயே அதிகளவில் இருக்கும் என அனுமானம்

(பிரேமானந்த்)

அரியாலை, சிந்துப்பாத்தி மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெரும் மனிதப் புதைகுழியிலிருந்து (செம்மணி மனிதப் புதைகுழி) நேற்று வரையில் 33 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 27 உடல்கள் முழுமையாக மீட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. நேற்று மட்டும் 6 எலும்புகள் அடையாளப்படுத்தப்பட்டன. அவை இன்று அகற்றப்படும். அதேநேரம் அந்த இடத்தில் இதுவரையில் தோண்டப்பற்றவற்றிலும் பார்க்க அதிகசடலங்களைக்கொண்டிருக்கும் என்று நம்பப்படும் பெரும் புதைகுழி இன்று தோண்டப்படவுள்ளது. அந்தக் குழியிலிருந்து பெரும் எண்ணிக்கையிலானஎலும்புக்கூடுகள் மீட்கப்படலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.









சிந்துபாத்தி மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காகக் குழி தோண்டப்பட்டபோதுஅதிலிருந்து ☞2

## செம்மணி விசாரணையை வலியுறுத்தி திருமலையில் சுடர்விட்ட தீப்பந்தங்கள்



செம்மணி மனிதப் புதைகுழியில் அகழப்பட்டு வருகின்ற மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொண்டு அதற்கான நீதியை வலியுறுத்தி திருகோணமலை பட்டணத்தெரு மக்களால் நேற்று தீப்பந்தப் ☞2

## ஊசி மூலம் போதைப்பொருள் எடுத்து வந்தவர் உயிரிழப்பு

ஊசி மூலமாகப் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்தார் எனக்கூறப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். புன்னாலைக்கட்டுவன் தெற்கு பகுதியைச் சேர்ந்த சக்திவேல் நிதுசன் (வயது 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் 5 மாதங்களாக ஊசி மூலமாக ☞2

## செம்மணி தொடர்பில் நீதியான விசாரணை

### அமைச்சர் விமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதிமொழி

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணை நடத்துவோம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்கநேற்றுயாழ்ப்பாணத்தில் ☞2

## செம்மணியை மூடிமறைக்க இனி அனுமதிக்க மாட்டோம்

### தமிழ் அரசுக் கட்சி பொதுச் செயலர் அறிவிப்பு

மன்னார், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகளின் தொடர் விசாரணைகள் முடங்கிப்போனதைப் போன்றதொருநிலமைசெம்மணிக்கும் வர அனுமதிக்கமாட்டோம். அதனை மூடிமறைக்க விடமாட்டோம் ☞2

# இந்தியாவின் மாநிலமாக இலங்கையை மாற்றுவதற்கு இரகசியமான முயற்சி

### தேசிய பாரம்பரியத்தை காக்கும் அமைப்பின் தலைவர் தேரர் மெதகொட தெரிவிப்பு

இந்தியாவின் 29ஆவது மாநிலமாக இலங்கையை மாற்றியமைக்கும் பல செயற்பாடுகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுவதை அறிய முடிகிறது. இவ்வாறு இடம்பெற்றால் ஆசியாவின் இஸ்ரேலாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் மாற்றமடையும் அதன் பின்னர் இலங்கைக்குள் எல்லையை பாதுகாக்க வேண்டிய போராட்டம் தலைதூக்கும் என தேசிய பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் நட்பு நாடு என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியா தொடக்க காலத்தில் இருந்து இலங்கைக்கு பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் ஊடாக தமது நிகழ்ச்சி நிரலை செயற்படுத்திக் கொள்ளவே இந்தியா முயற்சிக்கும்.

திருகோணமலை துறைமுகம் பற்றி தற்போது எவரும் கவனம் செலுத்துவதில்லை. திருகோணமலை துறைமுகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இந்தியா பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்த செயற்திட்ட வலயத்துக்குள் புராதன கோயில்கள் மற்றும் பௌத்த விகாரைகள் உள்ளன. ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பார்க்கின்றபோது தெரிகின்றது. அங்கு முதலாவது கூட்டத்திலேயே சோறு கேட்ட பிரகஸ்பதி, அடுத்த கூட்டத்தில் அந்தக் களங்கத்தைத் துடைக்க ஒரு போராட்டம் நடத்தியதாகப் பாவ்லா காட்டினார். கூட்டம் கூட்டப்பட்டதன் நோக்கம் முடிந்து முதல்வர் வெளியேறியபோது, அவரைத் தடுத்து நிறுத்த ஒரு நாடகமாடியதுடன், முதல்வர் வெளியேறிச் சென்ற பின்னர் தான் சுகாதாரக் குழுவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஒரு பித்தலாட்டத்தில் ஈடுபட்டார். அது பின்னர் மாநகர சபைக் கூட்டத்தில் குழப்பம் என்றவாறாக ஊடகங்களிலும், யூரியூப்பிலும் பிரபலமானது.

இது முடிய, யாழ். மாநகர சபை குப்பை கொட்டும் கல்லுண்டாய் வெளியில் திடீரென தீப்பற்றிக்கொண்டது. நேற்று அதற்கெதிராக என்றுகூறி அங்கு குப்பை கொட்டச் சென்ற ட்ராக்டர்களை மறித்து ஒரு போராட்டத்தையும் கொஞ்சப்பேர் செய்தனர். இவர்களிலும் சங்குப் பின்னணி கொண்டவர்களே முன்னிலையில் இருந்தனர் என்று சொல்லப்படுகின்றது.

அது குறித்துக் கருத்துச் சொன்ன ஒருவர் கூறும்போது, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குப்பையைக் கொளுத்திவிடுவார்கள், ஞாயிற்றுக்கிழமை மாலையில் அணைத்துவிடுவார்கள் என்று சொன்னார். அப்படியிருப்பின் அப்போதெல்லாம் செய்யாமல் விட்ட போராட்டத்தை இப்போது ஏன் செய்கிறார்கள் என்கிற கேள்வியைத் தவிர்க்க முடியாது.

இப்படிச் சொல்வதற்காக மாநகர சபை கல்லுண்டாயில் குப்பை கொட்டுவதை நியாயப்படுத்துவதாகவோ, அங்கு குப்பை கொட்டப்படுவதால் அங்குள்ள மக்களுக்குப் பாதிப்பில்லை என்றோ அர்த்தமாகிவிடாது. கல்லுண்டாயில் குப்பையையும் கொட்டி, அங்கு குடியேற்றத்தையும் மேற்கொண்ட எமது 'திட்டமிடல்' அதிகாரிகள் அரசியல்வாதிகளையே இது தொடர்பில் மெச்சிக்கொள்ளவேண்டும். கல்லுண்டாயின் இரு பகுதிகளிலும் அதாவது குப்பை கொட்டுமிடத்திற்குக் கிழக்காக பொம்மைவெளியிலும் மறுபுறமான மேற்குப் பகுதியிலும் மக்கள் அரசின் திட்டங்கள் ஊடாகவே குடியமர்த்தப்பட்டார்கள். அதைச் செய்த அதிகாரிகளும் அரசியல்வாதிகளுமேதான் கல்லுண்டாயில் குப்பையைக் கொட்டும் முடிவையும் எடுத்தார்கள். இதுபோன்ற தூ-ர நோக்கற்ற திட்டங்களால் இன்று அவதிப்படுபவர்கள் என்னவோ மக்கள்தான். எனவே இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டேயாகவேண்டும். அது அரசியலாக்கப்படுவதற்குப் பதில், அதற்குத் தீர்வு காணப்படுவதே முக்கியம்.

அதைவிடுத்து சபைகளில் தொங்குப்பறி ஆட்சிதானே உள்ளது, அதனால் இப்படி நெருக்கடிகளைக் கொடுத்து ஆட்சியை ஒன்றுமில்லாதது ஆக்கிவிடலாம் என்று நினைப்பது சீரழிவாகவே முடியும். இது பின்னர் ஒரு இடத்தோடு மட்டும் நின்றுவிடாது, வடக்கு கிழக்கு முழுவதும் பழிக்குப் பழி என்ற வடிவத்தில் தொடர்ந்து மேலும் சீரழிவையே கொண்டுவரும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## 4ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்செயலாக மனித எலும்புகள் வெளிப்பட்டன. அதைத் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கை மூலமாக அந்தக் குழியைத் தோண்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அங்கு இதுவரையில் மூன்று தொகுதிகளாக குழிகள் தோண்டப்பட்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. முதன்முதலில் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் தோண்டப்பட்ட குழி முதலாவது தொகுதியாகவும் அதனருகில் தோண்டப்பட்ட மற்றைய இரு குழிகளும் இரண்டாவது மூன்றாவது தொகுதிகளாகவும் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றது.

இவற்றைத் தவிர்த்து அங்கு நான்காவது தொகுதியாகவும் ஒரு புதைகுழி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது இன்று தோண்டப்படவுள்ளது. இதுவரை தோண்டப்பட்ட மூன்று தொகுதிகளைவிடவும் அதற்குள்ளேயே அதிகளவு எலும்புக்கூடுகள் இருக்கும் என்று பணியில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் கருதுகின்றார்கள். அந்த இடத்தில் மண் அடைந்துள்ள நிறமாற்றத்தினை வைத்து அவர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இதுவரை தோண்டப்பட்ட மூன்று தொகுதிகளிலும் வெவ்வேறு ஆழங்களில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், அதாவது ஒரே தினத்தில் அல்லாமல் வெவ்வேறு தினங்களில் இந்தப் புதைகுழிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற அநுமானமும் நிபுணர்களிடம் காணப்படுகின்றது.

நேற்றைய தோண்டும் பணியின்போது மேலும் 6 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் ஒன்று சிறுமியினுடையது. அதனுடன் சேர்ந்து நீல நிறத்தில் ஆங்கில எ-ழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரு பையும் கண்டறியப்பட்டுள்ளது. அது போர்க்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு 'யுனிசெவ்' எனப்படும் ஐ.நா.சிறுவர் நிதியம் வழங்கிய பையை ஒத்ததாகக் காணப்படுவதாக நம்பப்படுகின்றது. பை இன்றும் மீட்கப்படாத காரணத்தால் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. இந்தச் சிறுமியின் சடலத்துடன் பெரும் கல் ஒன்றும் காணப்படுகின்றது.

இன்று அந்தப் பை மீட்கப்பட்ட பின்னர் அது என்ன பை, அதற்குள் என்ன பொருட்கள் இருந்தன. அந்தப் பொருட்களைக் கொண்டு இந்தப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டவர்கள் எந்தக் காலப்பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்கிற அனுமானத்திற்கு வரலாமா என்பது போன்ற விவரங்கள் தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, புதைகுழியில் இருந்து சிறு துணித்துண்டு ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுவரை காலமும் புதைகுழியில் இருந்து வேறு பொருட்கள் எவையும் மீட்கப்படாத நிலையில் நேற்றே முதற்றடவையாக பை ஒன்றும் துணி ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மனிதப்புதைகுழி காணப்படும் இடத்திலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் இருந்த நேற்று மண் மாதிரிகளும் பரிசோதனைக்காகச் சேகரிக்கப்பட்டன. கொழும்பிலிருந்து வந்த நிபுணர்கள் குழுவால் மண் மாதிரி சேகரிக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திலிருந்து வந்திருந்தவர்களாலும் மண் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

நேற்றைய பணிகள் மதியம் 1 மணியுடன் நிறைவுறுத்தப்பட்டிருந்தன.

## செம்மணியை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் தற்போது வெளிநாட்டில் உள்ள நிலையில் செம்மணிப் புதைகுழி தொடர்பில் தனது முகப் புத்தகத்தில் இட்டுள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

''இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் மனிதப் புதைகுழிகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. உண்மை கண்டறியப்படவேண்டுமானால் இந்த மனிதப் புதைகுழிகளைச் சரியான முறையில் ஆய்வு செய்தாலே பல விடயங்கள் அம்பலமாகும். அதனால்தான்' அணையா விளக்கு போராட்டம் அறிவிக்கப்பட உடனேயே அதற்கு ஆதரவு தெரிவித்து எமது கட்சியினரும் பெரும் எண்ணிக்கையில் கட்சி அடையாளங்களைத் தவிர்த்து அதிலே கலந்துகொண்டார்கள். வெளி நாட்டிலே இருந்த காரணத்தினால் என்னாலும் வேறு சிலராலும் இதில் நேரடியாகக் கலந்து கொள்ள முடியவில்லை.

இந்த மனிதப் புதைகுழியும் வடக்கு கிழக்கிலே அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றைய மனிதப் புதை குழிகளும் சர்வதேச நிபுணர்களின் மேற்பார்வையோடு சரியான முறையிலே அகழாய்வு செய்யப்படவேண்டும். அறிவியல்பூர்வமாக இது அனுகப்படவேண்டும்.

இதற்கான முயற்சிகளை சர்வதேச நிறுவனங்களுடன் நாம் தொடர்ச்சியாகச் செய்து வருகிறோம். மன்னார் மற்றும் கொக்குத்தொடுவாயில் தற்போது கைவிடப்படதைப் போல் இந்த விடயங்களை மூடி மறைக்க நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை''- என்று தெரிவித்துள்ளார்.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துத் தெரிவித்தார்.

அவர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

'''மனித எலும்புக்கூடுகளைக் கார்பன் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான ஆய்வுகூடம் ஒன்றை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். மனிதப் புதைகுழி, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை எவ்வளவு ஆழமானது என்பதை நாம் அறிவோம். ஆகவே, செம்மணி மனிதப் புதைகுழிக்கான நீதியை நீதிமன்றச் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு வழங்குவோம்.

அரசு என்ற ரீதியில் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு மில்லியன் கணக்கான நிதியை ஒதுக்கியுள்ளோம்'' - என்றார்.

# ஹெரோயினுடன் இருவர் கைது

*யாழ்ப்பாணத்தில் இரு இளைஞர்கள் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 80 மில்லிகிராம் ஹெரோயினுடனும், 100 மில்லிக்கிராம் ஹெரோயினுடனும் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கைது செய்யப்பட்ட இருவரையும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். இன்று அவர்கள் நீதிமன்றில் முன்னிறுத்தப்படுவர்.*

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




## ஊசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைவஸ்தை உடலினுள் செலுத்தி வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜீன் 27 இவருக்கு உடல் சுகயீனம் ஏற்பட்டதால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக சனிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் உயிரிழந்துள்ளார். அவரது இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி பிறேம்குமார் மேற்கொண்டார்.

## இந்தியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்திய ஆட்சியாளர்களால் பலவந்தமான முறையில் இலங்கை மீது திணிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தால் பல விளைவுகள் ஏற்பட்டன. நீதிமன்ற உத்தரவினால்தான் இந்த ஒப்பந்தம் இன்றும் இழுபறிநிலையில் உள்ளது. இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை செயற்படுத்துமாறு இந்தியா இன்றும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கிறது.

இந்தியாவுடன் இன்று செய்துகொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தமும் எதிர்காலத்துக்கும் தாக்கம் செலுத்தும் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்தியாவுடன் அண்மையில் பாதுகாப்பு, வலுசக்தி மற்றும் டிஜிட்டல் துறை தொடர்பில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்களின் உள்ளடக்கத்தை ஆளும்தரப்பு இதுவரையில் பகிரங்கப்படுத்வில்லை.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு சார்ந்த ஒப்பந்தத்தில் இலங்கை இராணுவத்தை இரண்டாம் நிலையாக்கும் வகையில் பல ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கனடா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்ட விடுதலை புலிகள் அமைப்பை இலங்கை இராணுவத்தினர் இல்லாதொழித்தார்கள். மகாநாயக்க தேரர்கள் மற்றும் இராணுவத்தினர் இலங்கையின் காவல்தெய்வங்கள் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

வலுச்சக்தி தொடர்பில் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் இலங்கையில் சுயாதீனம் மற்றும் இறையான்மையை பாதிக்கும் வகையில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பங்களாதேஷ் நாட்டின் வலுச் சக்தியை இயக்கும் அதிகாரம் இந்தியாவிடம் உள்ளது. ஆகவே வலுச் சக்தி துறையின் இறையாண்மையை இந்தியாவிடம் விட்டுக்கொடுத்து நாட்டைக் காட்டிக்கொடுக்க முடியாது. இந்தியாவுடன் இந்த ஆளும்தரப்பு கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களுக்கு நாட்டு மக்கள் அனுமதியளிக்கவில்லை. ஜேவிபிதான் அனுமதியளித்துள்ளது.

சுற்றுலாத்துறை அபிவிருத்திசெய்வதற்காக இலங்கையில் 21 இராமர் கோயில்களை நிர்மாணிப்பதாக இந்தியா குறிப்பிடுகிறது. இந்து பிராமண சூழலில் பௌத்த மதம் பாதுகாக்கப்படாது. இதனால்தான் இந்தியாவில் பௌத்த மதம் இல்லாதொழிந்தது. இந்த நிலைமை இலங்கையில் ஏற்பட இடமளிக்கமுடியாது.

இந்தியாவின் 29ஆவது மாநிலமாக இலங்கையை மாற்றியமைக்கும் பல செயற்பாடுகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுவதை அறிய முடிகிறது. இவ்வாறு இடம்பெற்றால் ஆசியாவின் இஸ்ரேலாக இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் மாற்றமடையும் அதன் பின்னர் இலங்கைக்குள் எல்லையை பாதுகாக்க வேண்டிய போராட்டம் தலைதூக்கும். ஆகவே ஆட்சியாளர்கள் தாம் தற்காலிக உரிமையாளர்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு செயற்படவேண்டும் -- என்றார்.

# உலக வங்கித் திட்டங்களுக்கு இணைப்புக் குழு முன்மொழிவு

உலக வங்கியால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளின் தொடர் நடவடிக்கைக்காக இணைப்புக்குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்தகலந்துரையாடலில்முன்மொழியப்பட்டுள்ளது.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தலைமையிலான குழுவினருக்கும், அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி, சந்திரசேகரன், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் மற்றும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், சிறீபவானந்தராஜா, ரஜீவன், திலகநாதன், ஜெகதீஸ்வரன் ஆகியோர் அடங்கிய குழுவினருக்கும் இடையில் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக்கூட்டம் குறித்து அவரது செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆளுநர் தனது வரவேற்புரையில், ஜனாதிபதியின் வழிகாட்டலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் திட்டங்களை முன்னெடுப்பதற்காக வந்துள்ள உலக வங்கிக் குழுவினருக்கு நன்றிகளைத் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் சந்திரசேகரன், எமது மாகாணத்தைக் கட்டியெழுப்ப உலக வங்கி கரம் கொடுத்து உதவவேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்தார். அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஆளும்தரப்பின் சார்பில் உலக வங்கியின் முயற்சிக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

உலக வங்கியால் வடக்கு மாகாணத்திற்கு பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட பயணம் மற்றும் அதிகாரிகள், மக்கள் சமூகங்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 8 வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் 7 வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 3 வலயங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 வலயங்களும் வடக்கின் ஏனைய 3 மாவட்டங்களில் தலா ஒரு வலயங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. இதில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை இணைக்கும் கொக்கிளாய் பாலமும் முன்மொழிவாக உள்ளடக்கப்பட்டுள்ளது. உலகவங்கியால் விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை, தொழில்நுட்பம் ஆகிய 4 விடயப் பரப்புக்களின் கீழ் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பதுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முதல் கட்ட செயற்படுத்தலுக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஒவ்வொரு மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்கள் தங்களது மேலதிக தேவைப்படுத்தல்களையும் முன்வைத்தனர். எதிர்காலத்தில் உலக வங்கியால் அவற்றை கவனத்திலெடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர். உலக வங்கியின் செயற்றிட்டத்தை தொய்வின்றி விரைவாக செயற்படுத்துவதற்காக இணைப்புக்குழுவொன்றும்முன்மொழியப்பட்டது. அந்தக்குழு அடுத்தகட்ட நடவடிக்கைகளைவிரைந்து முன்னெடுப்பது என்று இன்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது - என்றுள்ளது.

## யாழ். பல்கலை சட்டத்துறையின் 20 ஆண்டு பூர்த்தி நிகழ்வு நேற்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டு இருபது ஆண்டுகள் பூர்த்தியாகுவதையோட்டி பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் நேற்று விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதிபதி நவாசும் கௌரவ விருந்தினராக சட்டத்தரணி மாலா சபாரத்தினமும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தொடர்பான ஆவணப்படமொன்று வெளியிடப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரசசட்டவாதி நிஸாந்தவின் நெறியாள்கையில் நடைபெற்ற குழு விவாதத்தில் இலங்கை சட்டக் கல்லூரி அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்தலால் டி அல்வீஸ், சட்டத்தரணி இளங்கோவன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, சட்டத்தரணி எர்மிசா, சட்டத்தரணி ஜெயகுமார் ஆகியோர் நேரடியாகப் பங்கேற்றதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய இணைய வழியில் இணைந்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# செம்மணியின் நீதி

**யாழ்ப்பாணம் செம்மணியில் (அரியாலை சிந்துப்பாத்தி மயானத்தில்) இடம்பெற்று வரும் மனிதப் புதைகுழி தோண்டும் பணிகள், இப்போது மிகச் சோகமானவையாகவும், அதேவேளை பீதியை உருவாக்கும் சாட்சிகளாகவும் மாறியுள்ளன. ஏற்கனவே 27 எலும்புக்கூடுகள் எடுத்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 6 எலும்புக்கூடுகள் நேற்று (ஜுன் 29) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுவரை தோண்டப்பட்ட மூன்று தொகுதிகளிலும் காட்டப்படாத அளவுக்கு, நான்காவது பகுதியில் கூடுதலான எலும்புக்கூடுகள் உள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது.**

**இந்நிகழ்வுகள், ஒரே நேரத்தில் இரு முக்கியமான விசயங்களை நமக்கு நினைவூட்டுகின்றன: ஒன்றாவது, இலங்கையின் வன்முறையான அண்மைய வரலாற்றின் தீவிரத்தை, இரண்டாவது, அந்த வரலாற்றை மறைக்க ஆளும் அரசியலின் தொடரும் முயற்சியை.**

**மனிதப் புதைகுழிகள் எங்கு தோண்டப்படுகிறனவோ, அங்கு நீதியின் குரல் வலுப்பெறும். ஏனெனில் இலங்கையில் நடந்த போரின்போது மக்கள் காணாமல் ஆக்கப்பட்டனர், சிறைகளில் கொல்லப்பட்டனர், அல்லது வனப்பிரதேசங்களில் மறைக்கப்பட்டனர் என கூறப்பட்ட வரலாற்றுச் சாட்சிகள், இப்போது மண்ணில் புதைந்த நிலையில் வெளிப்படத் தொடங்கியுள்ளன. இதை அடையாளப்படுத்தும் பணிகள் ஜனநாயக நாட்டில் ஆளும்தரப்பின் முனைப்பால் நடத்தப்பட வேண்டியவையாக இருக்கவேண்டும். ஆனால், இலங்கையில் இது மக்கள் அழுத்தத்தால், பெருமளவு ஊடகக் கவனத்தால், மற்றும் குறுகிய கால அரசியல் பயத்தால் மட்டுமே நடைபெறுவது வேதனையளிக்கிறது.**

**செம்மணியில் தோண்டப்படும் ஒவ்வொரு எலும்புக்கூடும், ஒரு குடும்பத்தின் கண்ணீரை, ஒரு இனத்தின் விடியலுக்கான போராட்டத்தை, ஒரு நாடு மறைத்த கொடூர வரலாற்றின் பக்கங்களைத்தெரிவிக்கின்றன.ஆனால்இந்தவெளிச்சத்தில்கூட, அதிகாரங்கள் மௌனமாக இருப்பதும், சிலர் இதனை மறைக்க அல்லது தவிர்க்க முயல்வதும் கவலையை அதிகப்படுத்துகின்றன. அந்தப் பகுதிக்கு இதுவரையில் எந்தவொரு ஆளும்தரப்பு அமைச்சரோ, அரசுத் தலைவர் செயலகம் போன்ற இடங்களிலிருந்தான உயரதிகாரிளோ வந்து பார்வையிடவோ அக்கறை செலுத்தவோ இல்லை. இந்த நிலமை ஆளும்தரப்பின் நேர்மையைக் கேள்விக்குட்படுத்துகின்றது.**

**இதுவரை எந்தவொரு ஆளும்தரப்பும் இப்படியான புதைகுழிகளில் காணப்படும் மனித அவலங்களை நேர்மையாக எதிர்கொண்டதில்லைஎன்பதேஇலங்கையின்வரலாறு. காலங்கள் இழுத்தடிக்கப்பட்டு பின்னர் அந்த விசாரணைகள் நீர்த்துப்போகச் செய்யப்பட்ட வரலாறே உண்டு. வெறும் சோதனைக்கான குழுக்களோ அல்லது நீதிமன்ற செயற்பாடுகளோ, மறைக்கும் நோக்கத்துடன் மட்டும் நடக்கக்கூடாது.**

**மக்கள் சாட்சி கொடுப்பதற்கும், சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கும் பாதுகாப்பான சூழல் வேண்டியது அவசியமாகும். அந்த நிலைமை இல்லாமல், எத்தனை எலும்புக்கூடுகள் தோண்டப்பட்டாலும், உண்மை வெளிக்குவராது. சாட்சியங்கள் கொடுப்பதுடன் மட்டுமல்லாது, விசாரணைகளை தொடர்வதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை, குறிப்பாக எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்கான கார்பன் சோதனை மற்றும் டிஎன்ஏ சோதனை போன்ற பெரும் செலவு பிடித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கான நிதி வசதியையும் ஏற்படுத்தவேண்டியிருக்கிறது. ஆளும்தரப்பு ஒத்துழைக்காமல் இதுபோன்ற விடயங்களில் முன்னேற்றம் ஏற்படாது.**

**செம்மணியில் தோண்டப்படும் நான்காவது பகுதிக்கு மக்கள் கவனம் அதிகரிக்க வேண்டியது அவசியம். அரசும், நீதிமன்றங்களும், மனித உரிமை அமைப்புகளும், ஊடகங்களும், இவற்றை தவிர்க்கமுடியாத பொது நினைவாக நிலைநிறுத்த வேண்டியது இது போன்ற விசாரணைகளின் உண்மை வெற்றி ஆகும்.**

**இந்த மண்ணின் அடியில் பதிந்திருக்கும் உண்மையை வெளிக்கொணரவேண்டும். ஒவ்வொரு எலும்புக்கூடியும் சாட்சியாகவும் சபதமாகவும் நம் மனங்களில் நிலைத்து நிற்கவேண்டும் – இனிவரும் தலைமுறைகளுக்காகவும், நீதி நிலைநிறைவதற்காகவும்.**

# கச்சதீவு எக்காரணத்துக்காகவும் இந்தியாவிடம் கையளிக்கப்படாது

## அமைச்சர் சந்திரசேகரன் திட்டவட்டம்

*இராஜதந்திர ரீதியிலும் சட்ட ரீதியாகவும்இலங்கைக்குவழங்கப்பட்ட கச்ச தீவு எக்காரணத்துக்காகவும் இந்தியாவிடம்மீளகையளிக்கக்கப்பட மாட்டாது. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் ஏற்படுத்தும் அழிவினால் எதிர்காலத்தில் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.*

*கடற்றொழில் அமைச்சில் சனிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*இந்தியாவில் தேர்தல் அண்மிக்கும் போது குறிப்பாக தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் கைகளிலெடுக்கும் முதலாவது ஆயுதம் கச்சதீவாகும். கச்சதீவினை இலங்கைக்கு வழங்கியது தவறு என்றும், அதனை நாம் மீளப் பெற்றுக் கொள்வோம் என்றும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளால் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுவது வழமையான ஒன்றாகும்.*

*இது அவர்கள் தமது வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ளும் உத்தியாகும். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கரும் இவ்விடயம் தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது தவறு என்றும், அந்த சந்தர்ப்பத்தில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாகவே இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.*

*இந்திய மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைளால் எமது மீன்வளம் மாத்திரமின்றி முழுக்கடல் வளமும் அழிந்து கொண்டிருக்கிறது என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு நினைவு படுத்த விரும்புகின்றேன். இந்த அழிவு தொடருமானால் வரும் 15 - 20 ஆண்டுகளில் இலங்கையின் கடல் பாலைவனமாகும் அபாயத்தை தவிர்க்க முடியாது. தமிழ்நாட்;டு அரசியல்வாதிகளின் சதித்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டாம்எனஜெய்ஷங்கரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.*

*சர்வதேச சட்டத்துக்கமைய சட்ட ரீதியாகஜனநாயகமானமுறையிலேயே நாம் கச்சதீவினைப் பெற்றுக் கொண்டோம்.எனவேஅதனைமீண்டும் வேறு எவரும் கையகப்படுத்துவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. நாம் இது குறித்து இந்திய மத்திய ஆளும்தரப்பிடமும், தமிழ்நாட்டு ஆளும்தரப்பிடமும் பேச்சு நடத்தி வருகின்றோம். எனவே இந்தப் பிரச்சினை தொடர்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றார்.*

# மாநகர சபையின் 'குப்பை' வாகனங்களை மறித்து கல்லுண்டாயில் நேற்று போராட்டம்

## குப்பைகள் எரிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

*யாழ்ப்பாண மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்களை மறித்து கல்லூண்டாய் பகுதி மக்களும் இன்றையதினம் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*யாழ்ப்பாணம் மாநகர சபையினரால் சேகரிக்கப்படும் கழிவுகளை மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கல்லூண்டாய் பகுதியில் கொட்டுவதனை நிறுத்தும்படி கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*இதன்போது மாநகர சபைக் கழிவுகளை ஏற்றிவந்த உழவியந்திரங்கள் கல்லுண்டாய் பகுதியில் மக்களால் வழிமறிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டது.*

*கல்லுண்டாய் பகுதி குப்பை மேட்டில் நேற்றை தினம் சனிக்கிழமை இரவு திடீரென தீ பிடித்தமையால் ஏற்பட்ட புகை மண்டலாத்தால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டதுடன், சுவாச பிரச்சனை உடையவர்கள் சிறு பிள்ளைகளை கொண்ட குடும்பத்தினர் அம்பது வீடுகளில் இருந்து வெளியேறி நண்பர்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.*

*கல்லுண்டாய் பகுதியில் குப்பைகளை கொட்டுவதனால் அயலில் வசிக்கும் மக்கள் சுகாதாரப் பிரச்சனைகள் உள்ளிட்ட பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன், நிலத்தடி நீரும் மாசடைவதால் அயல் கிராம நன்னீர் நிலைகளும் பாதிக்கப்பட்டு வருவதானல் குப்பைகளைக் கொட்டவேண்டாம் எனப் பல வருட காலமாக அப்பகுதி மக்கள் கோரிக்கைகளை விடுத்து வருவதுடன் பல்வேறு சந்தர்பங்களிலும் போராட்டங்களில் ஈடுபட்டனர்.*

*இது தொடர்பாக நீதிமன்றத்திலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. குப்பைகள் கொட்டப்படுவது தொடர்பில் நீதிமன்றம் யாழ். மாநகர சபைக்கு விதிமுறைகளையும் விதித்திருந்தது. ஆனால், அந்த விதிகளை மீறியே தற்போது குப்பைகள் கொட்டப்படுவதாகவும், அவை சுகாதாரச் சீர்கேடான முறையில் எரியூட்டப்படுவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.*


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2025இல் வெளியிடப்பெற்றது